வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March - 2018

| தரம் :- 12 (2019) | தமிழ் | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

❖ **பகுதி ஒன்றில் 03 வினாக்களுக்கும் பகுதி 02 இல் 'அ' பிரிவிலிருந்து ஒரு வினாவுக்கும் 'ஆ' பிரிவிலிருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.**

### பகுதி I

**01. பின்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.**

அ) கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட
கெட்டிடத் துவந்த வுதவி கட்டில்
வீறு பெற்று மறந்த மன்னன் போல
நன்றிமறந் தமையா யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவி வன்
ஒலிமென் கூந்த லுரியவா நினக்கே

1) இப்பாடலின் பொருளை உமது உரை நடையில் எழுதுக.

2) தோழியின் மதிநுட்பம் புலப்படுத்தப்படுமாற்றினை விளக்குக.

3) இப்பாடலினூடாக வெளிப்படும் சங்க இலக்கியப் பண்புகள் எவை?

(4+3+3=10 புள்ளிகள்)

ஆ) மாமுனி வர்க்குற வாகி வனத்திடை யேவாழுங்
கோமுனி யத்தகு மென்று மனத்திறை கொள்ளாதே
யேமுனை யுற்றிடி லேழு கடற்படை யென்றாலு
மாமுனை யிற்சிறு கூழென விப்பொழு தாகாதோ

அ) இப்பாடல் இடம் பெற்ற சந்தர்ப்பம் யாது?

ஆ) இங்கு பயின்றுள்ள அணி யாது? விளக்குக.

இ) குகனது கோபம் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

(3+4+3=10 புள்ளிகள்)

agaram.lk

**02. அ) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.

1. உயிர் மெய் குறில் எழுத்துக்களின் எண்ணிக்கை
   1) 216 2) 126 3) 90 4) 72 5) 60 (   )

2. தமிழ்மொழிக்கு முதலில் வராத எழுத்துக்கள்
   1) மௌ, வௌ 2) ஒ, ஔ 3) வு, யொ
   4) து, நொ 5) சூ, கௌ (   )

3. வேற்றுநிலை மெய்ம்மயக்கமாக மட்டும் வரும் எழுத்துக்கள்
   1) க், ச் 2) ர், ழ் 3) ங், ஞ் 4) ம், ய் 5) வ், ள் (   )

4. மொழிக்கு இறுதியில் வராத உயிரெழுத்து
   1) அ 2) இ 3) உ 4) எ 5) ஒ (   )

5. பின்வருவனவற்றுள் காரணச் சிறப்புப் பெயர்
   1) மீன் 2) அணி 3) மீன்கொத்தி 4) கடல் 5) வட்டம் (   )

6. பின்வருவனவற்றுள் நெடிற்றொடர்க் குற்றியலுகரம்
   1) புரியாது 2) தெரியாது 3) முடியாது 4) விடியாது 5) யாது (   )

7. பின்வருவனவற்றுள் பகுதி இரட்டித்துக் காலங்காட்டாத வினைமுற்று
   1) நட்டான் 2) விட்டான் 3) புக்கான் 4) நடந்தான் 5) தொட்டான் (   )

8. பின்வருவனவற்றுள் பெயரெச்சமாக அமைவது
   1) நட 2) நடந்த 3) நடந்து 4) நடத்தல் 5) நடந்தான் (   )

9. தற்காலத் தமிழில் மொழிக்கு இறுதியில் வராத எழுத்துக்களை மட்டும் கொண்ட தொகுதி
   1) அ, இ, எ 2) ஆ, ஈ, ஏ 3) ஒ ஓ ஔ 4) எ ஒ ஔ 5) எ ஓ ஔ (   )

10. பின்வருவனவற்றுள் கன்னட மொழிச் சொல்
   1) இலஞ்சம் 2) தகவல் 3) பட்டாளம் 4) கந்தோர் 5) அக்கறை (   )

(10X1=10 புள்ளிகள்)

ஆ)

1) ஆக்கப் பெயர் என்றால் என்ன? உதாரணந் தருக.
2) உடனிலை மெய்ம்மயக்கம் என்றால் என்ன? உதாரணத்துடன் விளக்குக.
3) தன்மைப் பெயர்கள் வேற்றுமை ஏற்கும் போது அடையும் மாற்றங்களைக் குறிப்பிடுக.
4) புறச்சுட்டு என்றால் என்ன? உதாரணந்தந்து விளக்குக?
5) ஆறு உறுப்புக்களும் இடம் பெறும் பகுபதம் ஒன்றைக் குறிப்பிட்டு பகுத்துக் காட்டுக.

(5X2=10 புள்ளிகள்)

agaram.lk

**03. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 300 – 350 சொற்கள் கொண்டு கட்டுரை எழுதுக.**

அ) முத்தமிழ் வித்தகரின் தமிழ்ப்பணிகள்

ஆ) மொழியும் சமூகமும்

இ) இலங்கையில் ஊடக சுதந்திரம்

ஈ) மனித வாழ்வும் தொற்றா நோய்களும்

உ) செய்யும் தொழிலே தெய்வம்

(20 புள்ளிகள்)

## பகுதி II

## (அ) பகுதி

04. 'குற்றம் கடிதல்' என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளனவற்றை அடிப்படையாகக் கொண்டு

அ) குற்றங்கள் எவை?

ஆ) பொதுவாகக் குற்றத்தால் ஏற்படும் நிலை

இ) சிறப்பாகக் குற்றத்தால் ஏற்படும் நிலை என்பன பற்றித் தெளிவுறுத்துக.

(6+7+7=20 புள்ளிகள்)

05. மாணிக்கவாசகர் 'கோயில் திருப்பதிகத்'தில்

அ) இறைவன் பெருமைகள்

ஆ) தன்னை ஆட்கொண்ட அருள்

இ) இறைவன் துணை நிற்கும் தன்மை

ஈ) இறைவனோடு, கலக்கும் பக்குவம் என்பவற்றை வெளிப்படுத்துமாற்றை விளக்குக.

(5X4=20 புள்ளிகள்)

agaram.lk

06. மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

அ) சிலப்பதிகாரம் ஊர்காண் கதையில் கவுந்தியடிகள் கோவலனுக்குக் கூறிய அறிவுரைகள்.

ஆ) திருப்பாணாழ்வார் பாடிய அமலனாதிபிரானில் திருவரங்கத்தின் எழில்

இ) பூவொடு புரையுங் கண்ணும் என்று தொடங்கும் குறுந்தொகைச் செய்யுளில் நெய்தல் நிலச் சிறப்பு.

(10X2=20 புள்ளிகள்)

## (ஆ) பகுதி

07. அ) சங்ககால இலக்கியங்களை வகைப்படுத்துக.

ஆ) சங்க இலக்கியங்களின் பண்புகளை விளக்குக.

இ) கைக்கிளை, பெருந்திணை என்பவற்றை விளக்குக.

(7+7+6=20 புள்ளிகள்)

08. அ) சங்கமருவிய காலத்தில் எழுந்த அற இலக்கியப் பண்புகளை விளக்குக.

ஆ) சங்கமருவிய கால இலக்கியங்கள் முற்கால இலக்கியங்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன?

இ) தமிழிலக்கிய வரலாற்றில் காரைக்காலம்மையாரின் பங்களிப்பினை மதிப்பிடுக.

(7+7+6=20 புள்ளிகள்)